# Covid - 19 காலப்பகுதியில் பல்கலைக்கழக மாணவர்களின் ஓய்வு நேரப்பயன்பாடு: தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப்பீடத்தை மையப்படுத்திய ஆய்வு

M.S.F. Sumaiya[1], T.Rasiya Farwin[2] and M.F.F. Safna[3]

[1, 2 & 3]Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka
([1]msfathimasumaiya@gmail.com

**ஆய்வுச் சுருக்கம் :** Covid - 19 காலப்பகுதியைப் பொறுத்தவரை கல்வியானது இணையவழிக் கற்றல் முறையில் புதிய போக்காக உருவெடுத்துள்ளது. இந்த பின்னணியில் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வியும் நிகழ்நிலைக் கற்கையினூடாகவே மேற்கொள்ளப்படுகின்றது. இந்நிலையில் பல்கலைக்கழக மாணவர்களின் பொழுதுபோக்கு நிலமைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக இம்மாணவர்களின் பொழுதுபோக்கு விடயங்கள் இவர்கள் மத்தியில் எத்தகைய செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளது? என்பதனை ஆய்வுப்பிரச்சினையாக கொண்டுள்ளது. இவ்வாய்வு இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபு மொழிப்பீடத்தில் கல்வி கற்கின்ற மாணவர்கள் Covid-19 காலப்பகுதியில் அவர்களினுடைய ஓய்வு நேரத்தினை எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்பதனை கண்டறிதலை நோக்கமாக தன்னுள் கொண்டுள்ளது. இவ் ஆய்வானது குறித்த பீட மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஓய்வு நேரத்தின் போது திறன்பட பயன்படுத்துவதற்கான வழிமுறைகளை எடுத்துரைக்கும் வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. இவ் ஆய்வானது அளவுசார் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அமையப் பெற்றுள்ளது. இதற்காக முதலாம் நிலைத் தரவுகளும் இரண்டாம் நிலைத் தரவுகளும் சேகரிக்கப்பட்டன. இவ்வாய்வில் பின்வரும் ஆய்வு நுட்பங்கள் கையாளப்பட்டன. முதலாம் நிலைத் தரவுகளைப் பெறுவதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட வினாக்கொத்து வாட்சப் வழியாக கூகுள் படிவத்தில் அனுப்பப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளைச் சேகரிப்பதற்காக ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளம் போன்றவைகள் பயன்படுத்தப்பட்டன. இவ்வாய்விற்கான மாதிரிகளாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீட மாணவர்கள் ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டனர். இப்பீடத்திலிருந்து ஆய்வுக்காக முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருட ஆண்கள், பெண்கள் உட்பட 100 மாணவர்கள் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டனர். இப்பீட மாணவர்கள் இருபாலாரினதும் எண்ணிக்கையை அடிப்படையாகக்கொண்டு 70 பெண் மாணவர்களும் 30 ஆண் மாணவர்களும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். இப்பீடத்தின் இஸ்லாமிய கற்கைகள் பிரிவு மற்றும் அரபு மொழிக் கற்கைகள் பிரிவு இவ்விரண்டிலிருந்தும் மாணவர்கள் சமனற்ற எண்ணிக்கையில் தெரிவுசெய்யப்பட்டனர். பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக Microsoft Excel மென்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வின் பிரதான கண்டுபிடிப்பாக, இப் பீட மாணவர்களுள் அதிகமானோர் பல்கலைக்கழக வளாகத்தினில் இருந்த போது, குறைந்த வீதத்தில் ஓய்வு நேரம் காணப்பட்டாலும் அவர்கள் தமது பொழுது


ISBN 978-624-5736-14-0

போக்கு நேரங்களை சிறப்பாக பயன்படுத்தியுள்ளனர். தற்போதைய நிலையில் ஓய்வு நேரம் அதிகமாக காணப்பட்டாலும் அதை குறைந்த வீதத்தில் கற்றலுக்காக பயன்படுத்துகின்றனர். பல்கலைக்கழகத்தின் சூழல், ஏனைய பொழுதுபோக்கு வசதி வாய்ப்புக்கள், உள திருப்தி முதலியவை தற்போதைய சூழலில் காணப்படாமையும் அனைத்து நடவடிக்கைகளும் இணையத்தளத்தினூடாக மேற்கொள்ள வேண்டியமை மற்றும் வீட்டுச் சூழலில் கற்றல் நடவடிக்கைகளை உரிய முறையில் பயன்படுத்துவதற்கான சரியான வழிகாட்டல்கள் இல்லாமை காணப்படுகின்றமையினாலும் அவர்களின் ஓய்வு நேரத்தினை முறையாக பயன்படுத்த முடியாதுள்ளது. எனவே இத்தகைய சூழ்நிலைகளை மாற்றியமைத்து மாணவர்களை பொழுதுபோக்கு நேரங்களில் கல்விசார் நடவடிக்கைகளை ஆர்வத்துடன் ஈடுபடுத்தக்கூடிய வகையில் வழிகாட்டல்கள், நுட்பங்கள் போன்றவற்றை வடிவமைத்துக்கொடுத்தல் வேண்டும்.

**திறவுச்சொற்கள்:** Covid - 19 காலப்பகுதி, தென் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள், ஓய்வு நேரம்

**ஆய்வு அறிமுகம்:**

தொற்று நோய்கள் சீர்குலைக்கும் தன்மையைக் கொண்டுள்ளன. Covid-19 தொற்று நோயும் இதற்கு விதிவிலக்கல்ல.(Lishanthi, 2021). அந்த வகையில் பாரிய ஆட்கொல்லி நோயாக Covid - 19 தொற்று நோய் இன்று உலகில் அனைத்து துறைகளையும் பாதித்து வருகின்றது. இந்நோயானது சீனாவின் வூகான் மாகாணத்தில் 2019 டிசம்பர் 01 ஆம் திகதி இனங்காணப்பட்டது. (யென்-சின் லியு et al., 2020). உலகளவில் மனித செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்து சகல துறைகளும் ஆட்டம் காணும் நிலை நிலவுகிறது. இந்நிலையில் கற்றல், கற்பித்தலில் பல மாற்றங்கள் உருவாகி கல்வித்துறையில் செயற்பாடுகள் நடைபெறுகின்றது. நேரடியாகவே பாடசாலை மாணவர்கள் உட்பட பல்கலைக்கழக மாணவர்களும் கல்விக்கலாசாரத்துடன் பிணைந்திருந்த நிலைக்கு நிகர்மாறாக நிகழ்நிலைக்கு மாற்றமடைந்து வருகின்றனர். 186 நாடுகளில் சுமார் 1.2 மில்லியனுக்கும் அதிகமான மாணவர்கள் வகுப்பறைக் கற்கையில் இருந்து நிகழ்நிலைக்கற்கைக்கு மாற்றம் பெற்றவர்களாக இருக்கின்றனர். (உலக பொருளாதார மன்றம்., 2020). கொரோனா வைரஸ் இலங்கையிலும் மிக வேகமாகப் பரவி வருகின்ற காரணத்தால் வீடுகளில் முடங்கி இருக்குமாறு அரசாங்கம் வலியுறுத்தி வருகிறது. வைத்தியர்களும் சுகாதாரத்துறை நிபுணர்களும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து விடுபட வேண்டும் என்பதற்காக வீடுகளில் தனிமைப்பட்டு இருப்பதே சிறந்தது என அறிவுறுத்தி வருகின்றனர். இந்நிலையில் மாணவர்களின் கல்வி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதை நாம் அறிவோம். பாடசாலைகள், பிரத்தியேக வகுப்புகள், மத்ரசாக்கள், ஏனைய கல்வி நிறுவனங்கள், சுயகற்றல் நிலையங்கள் என அனைத்துமே மூடப்பட்டிருக்கின்றன. மரபு ரீதியாக மாணவர்கள் கற்று வந்த சகல வழிமுறைகளும் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இவ்வாறிருக்கையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது கல்வி, அரசியல், மருத்துவம், சுகாதாரம் போன்ற பல்வேறு துறைகளில் இடம்பெற்று வருகிறது. Moodle, Zoom, Classroom, YouTube போன்ற செயலிகள் மூலம் இணையத்தள ஒழுங்கமைப்பினூடாக உலக வங்கியின் அனுசரணையுடன்

நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. (உலக வங்கி., 2020). நிகழ்நிலைக்கற்றல் முறை மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளதா? இல்லையா? என்ற கேள்விக்கு பல்வேறு ஆய்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இருக்கையில் பல்கலைக்கழக மாணவர்கள் எவ்வாறு தமது நேரத்தை கழிக்கின்றார்கள்? ஓய்வு நேரங்கள் கற்றலில் திறம்பட பயன்படுத்தப்படுகின்றனவா? என்பது ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய அவசியம் கருதியே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

அந்த வகையில் தென்கிழக்குப் பல்கலைக்கழகமானது 10ஆவது அரச பல்கலைக்கழகமாகும். ஆறு பீடங்களைக்கொண்டியங்கும் இப்பல்கலைக்கழகம் 5500 மாணவர் தொகை கொண்ட உள்வாரிக்கற்கை நெறிக்காகவும், 11500 மாணவர்களை பல்வேறு வெளிவாரிக் கற்கை நெறிக்காகவும் உள்ளீர்ப்பு செய்துள்ளது. (நப்ரீஸ் et al., 2020). தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் கற்பிக்கப்பட்டு வருகின்ற நிலையில் VLE எனும் மெய்நிகர் கற்றல் சூழல் எனும் செயலியில் கற்றல் குறிப்புகள் தற்போது பதிவிடப்படுகிறது. Zoom, VLE, WhatsApp போன்ற செயலிகளினூடாக கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. கற்கும் நேரத்தைத் தவிர ஏனைய நேரங்களில் மாணவர்கள் செலவிடும் விதம் அவர்களின் வாழ்வில் செல்வாக்கு செலுத்தக்கூடியது. மூன்று வருட கால கற்கை நெறிக்காக உள்ளீரக்கப்பட்டு நேரடியான செயலமர்வுகள், சங்கங்களின் மூலம் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபட சந்தர்ப்பமளிக்கப்படுகிறது. ஆய்வுக்கலாசாரத்துடன், சமூக சிந்தனை கொண்ட எதிர்காலத்தலைவர்களை உருவாக்குவதில் பல்கலைக்கழகம் பங்களிக்கிறது. இந்நிலையில் நிகழ்நிலையில் மாணவர்களின் நேரம் எவ்வாறு கழிக்கப்படுகிறது என்பது பற்றி ஆய்வது முக்கியமானது.

ஒரு மனிதன் அவனது ஓய்வு நேரத்தில் தான் நேசிக்கின்ற விடயத்தில் தனது ஆன்மாவையும், வாழ்க்கையையும், உணர்ச்சிகளையும் மேம்படுத்த கவனம் செலுத்துவதே ஓய்வு நேரமாகும். (அப்துல் ஹஸன்., 2018). நேரம் சிறந்த கண்டுபிடிப்பாளராக இருக்கின்றது, நேரம் என்பது இளைஞர்களை உடைக்கும் சவாரி மற்றும் நேரம் பணம் செலுத்தப்படாத ஒரு வழக்கறிஞர் (கோபிநாத்., 2004). காலத்தின் பரிமாணத்தை விட கடமைகளின் கனதி எப்போதும் மனிதனுக்கு அதிகமாகவே இருக்கும். எனவேதான் நபிகளார் (ஸல்) அவர்கள் 5 விடயங்கள் வர முன் 5 விடயங்களைப் பயன்படுத்த வேண்டும் என ஏவுகையில் வேலைப்பளு வருவதற்கு முன்னர் ஓய்வைப் பயன்படுத்துமாறு வலியுறுத்தினார்கள். மேலும் மனிதர்கள் துஷ்பிரயோகம் செய்யும் மிகப்பெரும் இரு அருட்கொடைகளில் ஒன்றாக ஓய்வைச் சுட்டிக்காட்டினார்கள். பொதுவாக இளங்கலை மாணவர்கள் தமது கற்றல் சூழலில் இருந்து விலகி, நேரத்தை வீணாக கழிக்கும் நிலையில் இருப்பதாக காணப்பட்டாலும் இளங்கலை மாணவர்களின் ஓய்வு நேரம் எத்தகைய முறையில் பயன்படுத்தப்படுகின்றது மற்றும் வினைத்திறனான முறையில் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்குதல் தொடர்பாக இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகிறது.


ISBN 978-624-5736-14-0

**ஆய்வுப் பிரச்சினை:**

தற்போதைய Covid-19 காலப்பகுதியைப் பொறுத்தவரை அனைத்து செயற்பாடுகளும் வீட்டிலிருந்தவாறே மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு இருக்கையில் இணையத்தளமூடாக கல்வி கற்பது புதிய போக்காக உருவெடுத்துள்ளது. அந்த வகையில் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் அவர்களின் ஓய்வு நேரத்தினை முறையாக பயன்படுத்துவதைக் காணமுடியாதுள்ளது. Covid – 19 ஆனது கல்வியில் அனைத்து கல்வி தரங்களையும் பாதித்துள்ளது. 186 நாடுகளில் சுமார் 1.2 மில்லியனுக்கும் அதிகமான மாணவர்கள் வகுப்பறைக் கற்கையில் இருந்து நிகழ்நிலைக்கற்கைக்கு மாற்றம் பெற்றவர்களாக இருக்கின்றனர். (உலக பொருளாதார மன்றம்., 2020). இந்த வகையில் இலங்கையிலும் கல்வியில் இத்தகைய பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் உயர் கல்வியை தொடர்ந்தும் மேற்கொள்வதற்காக நிகழ்நிலைக் கற்றல், கற்பித்தல் இடம்பெறுகின்றது. இத்தகைய நிகழ்நிலைக் கற்றல் கல்வி குறித்த விழிப்புணர்வுகளிலும் (நப்ரீஸ் et al., 2020). செயல் முறைகளிலும் (ரமீஸ் et al., 2020). அடைவுகளிலும் (பண்டார, 2021). கற்றலிலும் (unicef, 2020). பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையை இவ் முன்னைய ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இருப்பினும் பல்கலைக்கழக மாணவர்களின் பொழுதுபோக்கு விடயங்கள் இவர்கள் மத்தியில் எத்தகைய செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளது? என்கின்ற விடயம் ஆய்வுக்குட்படுத்தப்படவேண்டியுள்ளது. இருந்தபோதிலும் பல்கலைக்கழக மாணவர்களின் பொழுதுபோக்கு நிலமைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றிய ஆய்வுகள் அறிவுக்கு எட்டிய வகையில் மேற்கொள்ளப்படவில்லை. இத்தகைய ஆய்வு இடைவெளியை ஆய்வுப் பிரச்சினையாக முன்வைத்து மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வின் நோக்கம்:**

1) இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீட மாணவர்களின் ஓய்வு நேரப்பயன்பாட்டினைக் கண்டறிதல்.

**ஆய்வு வினாக்கள்:**

1) இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகம் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீட மாணவர்களின் ஓய்வு நேரம் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது?

**ஆய்வு முக்கியத்துவம்:**

இவ் ஆய்வானது இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகம், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீட மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் மேற்கொள்ளப்படுகின்றது. மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் இருந்து தமது ஓய்வு நேரத்தை பயனுள்ள முறையில் கழித்துள்ளதாகவும் covid - 19 காலப்பகுதியில் தமது வீடுகளில் இருக்கும் போது ஓய்வு நேரங்களை கற்றலுக்காக உரிய முறையில் செலவிடுதலைக் காணமுடியாமல் இருகின்றது. ஆகவே இதற்கான காரணங்களை கண்டறிந்து அதனை திறன்பட பயன்படுத்துவதற்கான வழிமுறைகளை எடுத்துரைப்பதாக இவ்வாய்வு அமைகின்றது.

மற்றும் அவர்களுக்கு சிறந்த வழிகாட்டல்கள் வழங்கப்படாதவிடத்து அவர்களின் ஓய்வு நேரம் வீணாக கழிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறிக்குள்ளாகலாம். எனவே இதனை நிவர்த்தி செய்யும் வகையில் சிறந்த வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்குவதினூடாக இவ் ஆய்வானது முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது.


**ஆய்வு முறையியல்:**

இவ் ஆய்வானது அளவுசார் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அமையப் பெற்றுள்ளது. இதற்காக முதலாம் நிலைத் தரவுகளும் இரண்டாம் நிலைத் தரவுகளும் சேகரிக்கப்பட்டன. இவ்வாய்வில் ஆய்வு நுட்பங்களாக பின்வரும் நுட்பங்கள் கையாளப்பட்டன. முதலாம் நிலைத் தரவுகளைப் பெறுவதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட வினாக்கொத்து வாட்சப் வழியாக கூகுள் படிவத்தில் அனுப்பப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளைச் சேகரிப்பதற்காக ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளம் போன்றவைகள் பயன்படுத்தப்பட்டன. இவ்வாய்விற்கான மாதிரிகளாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இப்பல்கலைக்கழகத்தில் காணப்படும் ஆறு பீடங்களிலிருந்து இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடம் ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டது. இப்பீடத்திலிருந்து ஆய்வுக்காக முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருட ஆண்கள், பெண்கள் உட்பட 100 மாணவர்கள் எழுமாறாக தெரிவுசெய்யப்பட்டனர். இப்பீட மாணவர்கள் இருபாலாரினதும் எண்ணிக்கையை அடிப்படையாகக்கொண்டு 70 பெண் மாணவர்களும் 30 ஆண் மாணவர்களும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். இப்பீடத்தின் இஸ்லாமிய கற்கைகள் பிரிவு மற்றும் அரபு மொழிக் கற்கைகள் பிரிவு இவ்விரண்டிலிருந்தும் மாணவர்கள் சமனற்ற எண்ணிக்கையில் தெரிவு செய்யப்பட்டனர். பொதுவாக பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக Microsoft Excel மென்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**கண்டுபிடிப்புக்களும் கலந்துரையாடல்களும்**

இவ்வாய்வில் இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்திலிருந்து ஒழுங்கமைக்கப்பட்ட வினாக்கொத்து வாட்சப் வழியாக கூகுள் படிவத்தில் அனுப்பப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன. பெறப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருட ஆண், பெண் மாணவர்கள் இரு பாலாரையும் அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழக மாணவர்கள் பல எதிர்ப்பார்ப்புக்களை சுமந்து பல்கலைக்கழகத்தில் கால் பதிக்கின்றனர். ஆகவே பல்கலைக்கழக மாணவர்களினுடைய கனவுகளை வினைத்திறனாகவும் விலைத்திறனாகவும் அடைந்துகொள்வதனில் ஓய்வு நேரமானது மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. M.S.M.Hilmy ஓய்வு நேரம் எவ்வகையில் வீணடிக்கப்படுகிறது என்பது குறித்து கூறப்படும் இக்கூற்றானது பொழுதுபோக்கு சார் விடயங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது

அந்த வகையில் உரு 01 ல் பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக வளாகத்தினில் இருந்த போதும் கொரோனா தொற்று நோய் காரணமாக தற்போது வீட்டிலிருக்கும் போதும் அவர்களது ஓய்வு நேரத்தினை எவ்வாறு பயன்படுத்தினர் என்பதனை விபரிக்கின்றது. இப்படத்தினை அவதானிக்கும் போது, பல்கலைக்கழக வளாகத்தினில் மாணவர்கள், வணக்க வழிபாடுகளில் 42% ஆனவர்கள் ஈடுபட்டுள்ளனர். இருப்பினும் கோவிட்-19 காலத்தின் பின்னர் 57% ஆக இச்செயற்பாடுகள் அமைந்துள்ளன. எனவே வீட்டில் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. குறிப்பாக வணக்க வழிபாடுகள் எனும் போது பயான் கேட்டல், சுன்னதான தொழுகைகளில் ஈடுபடல், திக்ர் செய்தல், நண்பர்களிடையே மார்க்க விடயங்கள் பகிர்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுவந்துள்ளனர் இருந்த போதிலும் தமது வீடுகளில் வணக்க வழிபாடுகளாக பயான் கேட்டல், சுன்னதான தொழுகைகளில் ஈடுபடல், குர்ஆனை மனனமிடல் மற்றும் திக்ர் செய்தல், வீட்டு குடும்ப அங்கத்தவர்கள் ஒன்றினைந்து மஜ்லிஸ்கள் நடாத்துதல் போன்றவைகளில் ஈடுபட்டுள்ளனர். எனவே இங்கு மேலதிகமான வணக்க வழிபாடுகளை மேற்கொள்கின்றனர் என்பதனை இவ்வாய்வு முன்வைக்கின்றது.




மூலம்: ஆய்வுத்தரவுப்பகுப்பாய்வு - 2021

பல்கலைக்கழக வளாகத்தினிலே கல்விசார் விடயங்களில் 91% ஆனவர்கள் ஈடுபட்டுள்ளனர். கோவிட் 19 காலத்தின் பின்னர் 61% ஆனவர்களே இச்செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். எனவே பல்கலைக்கழக வளாகத்தினில் இருக்கும் போது இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர்களின் செயற்பாடுகள் அதிகரித்திருந்துள்ளன. இதனடிப்படையில் எழுத்துத் துறை (கட்டுரை, கவிதை) அழகியல் துறை, கற்பித்தல், நூல் நிலையத்திற்குச் செல்லல், குழு முறைக்கற்றல், சுய கற்றல், ஆய்வில் ஈடுபடல் மற்றும் வாசிப்பு போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இருந்தபோதிலும் வீடுகளில் எழுத்துத் துறை (கட்டுரை, கவிதை, கற்பித்தல், வாசிப்பு மற்றும் குறுந்திரைப்படம் எழுதுதல் புதிய விடயங்களைத் தேடி கற்றல் போன்ற விடயங்களில் ஈடுபட்டுள்ளனர். எனவே இங்கு குறைந்த வீதமானவர்களே கல்விசார் விடயங்களில் தமது ஓய்வு நேரங்களை பயன்படுத்தியுள்ளனர் என்பதனை இவ்வாய்வு முன்வைக்கின்றது.


மற்றும் தனிப்பட்ட திறமைகளை வெளிக்கொண்டுவருதில் பல்கலைக்கழக வளாகத்தினை அடிப்படையாகக்கொண்டு நோக்கும் போது 40% ஆனவர்கள் ஈடுபட்டுள்ளதுடன் கோவிட் - 19 காலத்தின் பின்னர் 34% ஆக இச்செயற்பாடுகளில் குறைந்து காணப்படுகின்றனர். குறிப்பாக கவிதை, கட்டுரை, பேச்சு மற்றும் கலைகள் (நடனம்/பாடல்/நடித்தல்) எழுத்தணி மற்றும் ஓவியம் வரைதல், திறனாய்வு, விளையாட்டு போன்றவற்றில் ஈடுபடட்டுள்ளனர். வீட்டினிலே அழகான குரலில் கிராஅத் ஓதுதல், கைப்பணிகள் தயாரித்தல் என்பனவற்றில் ஈடுபடுகின்றனர். எனவே இங்கு குறைந்த வீதமானவர்கள் தமது தனிப்பட்ட திறமைகளை வெளிக்கொண்டுவருதில் தமது ஓய்வு நேரங்களை பயன்படுத்துகின்றனர் என்பதனை இவ்வாய்வு முன்வைக்கின்றது.

மேலும் பல்கலைக்கழக வளாகத்தினில் மாணவர்கள், சமூக வலைத்தளங்களில் 26% ஆனவர்கள் ஈடுபட்டுள்ளனர். இருப்பினும் கோவிட் - 19 காலத்தின் பின்னர் 69% ஆக இந்நடவடிக்கைகள் அமைந்துள்ளன. எனவே வீட்டில் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. குறிப்பாக சமூக வலைத்தளங்கன் எனும் போது WhatsApp, YouTube, IMO, Instagram & Facebook, Twitter ஆகியவற்றில் ஈடுபட்டுவந்துள்ளனர். இருந்த போதிலும் தமது வீடுகளில் WhatsApp, Youtube, IMO, Instagram & Facebook, Twitter போன்ற சமூக வலைத்தளங்கள் போன்றவைகளில் ஈடுபட்டுள்ளனர். எனவே இங்கு மேலதிகமாக சமூக வலைத்தளங்களின் பாவனையை மேற்கொள்கின்றனர் என்பதனை இவ்வாய்வு முன்வைக்கின்றது. Lishanthi wijewardana (2021) covid- 19 தொற்று நோயால் உலகம் முழுவதும் கல்வி வீழ்ச்சி அடைந்துள்ளது. டிஜிட்டல் கல்வி அனுபவத்தை தழுவுவதனால் உயர் கல்வியில் இடையூறுகளை ஏற்படுத்தி உள்ளது என்கின்றனர். எனவே இக்கூற்றானது பொழுதுபோக்கு சார் விடயங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஏனைய விடயங்கள் எனும் போது பல்கலைக்கழக வளாகத்தினில் 35% ஆனவர்கள் ஈடுபட்டும் வீட்டில் 26% ஆனவர்களே ஈடுபட்டும் குறைந்து நிலையில் உள்ளன. இதனடிப்படையில் நண்பர்களுடன் கலந்துரையாடல், உல்லாசப்பயணம் மற்றும் தூங்குதல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளதுடன் வீட்டில் இருக்கும் போது தமது குழந்தையுடன் நேரம் செலவழித்தல், தையல் தொழில் செய்தல், இணைய வழிக் கைத்தொழில், தூங்குதல், சமையல், தொலைக்காட்சி பார்த்தல் மற்றும் வீட்டு வேலைகளை செய்தல் ஒரு சிலர் கோழி வளர்ப்பிலும் உறவினர்களுடன் கலந்துரையாடலிலும் செலவிடுகின்றனர். எனவே இங்கு குறைந்த வீதமானவர்களே தமது ஓய்வு நேரங்களை இத்தகைய செயற்பாடுகளில் பயன்படுத்துகின்றனர் என்பதனை இவ்வாய்வு முன்வைக்கின்றது.


இந்த அடிப்படையில் நோக்கும்போது பல்கலைக்கழக வளாகத்தில் இருக்கும் போதே மாணவர்கள் தமது கல்வி சார்ந்த விடயங்களிலும், திறமைகளை வெளிக்கொண்டு வருவதிலும் அதிகமாக பங்கு வகித்துள்ளனர். Covid – 19 குப் பின்னர் தமது வீடுகளில் சமூகவலைத்தளப் பாவனைகளையே அதிகமானோர் பயன்படுத்துகின்றனர். எனவே இவ்வாய்வின் படி மாணவர்கள் வீட்டுச் சுழலில் இருக்கும் போது கல்வி நடவடிக்கைகளுக்காக தமது ஓய்வு நேரங்களை பயன்படுத்திய வீதம் குறைவாக உள்ளதை இவ்வாய்வினூடாக அறிய முடிகின்றது.

உரு 02 : Covid - 19 சூழ்நிலையில் பல்கலைக்கழக மாணவர்களின் ஓய்வு நேரத்தினை கற்றலுக்குப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு




மூலம்: ஆய்வுத்தரவுப்பகுப்பாய்வு - 2021

உரு 03 : வசதி இல்லை




மூலம்: ஆய்வுத்தரவுப்பகுப்பாய்வு - 2021

மேலும் உரு 02 ஆனது Covid - 19 காலப்பகுதியில் பல்கலைக்கழக மாணவர்களின் ஓய்வு நேரத்தை கற்றலுக்குப் பயன்படுத்துவதற்காக அவர்களிடம் காணப்பட்ட வசதி வாய்ப்புக்கள் தொடர்பாக ஆராயப்பட்டதில் ஓய்வு நேரத்தை பயனுள்ள முறையில் செலவிடுவதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கின்றன என்று கூறுபவர்கள் 90.9% ஆனவர்களும் 9.1% ஐ உடையவர்கள் வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை என்று கூறுபவர்களாகவும் உள்ளனர். அத்துடன் வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை என்று கூறுபவர்கள் சில காரணங்களை முன்வைக்கின்றனர். அவைகளாக,

1) வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்வதனால் முகாமைத்துவம் செய்வதில் சிரமம்
2) உறவினர்களின் இடையூறு (உரையாடிக் கொண்டிருத்தல், வானொலி சத்தமாக ஒலிக்கப்படல்)
3) எமது கற்றல் நடவடிக்கைககளில் வீட்டு அங்கத்தவர்களிடம் புரிந்துணர்வு இல்லாமை.
4) கைத்தொழிலில் ஈடுபடுவதால் கடினம்
5) வீட்டிலிருந்து கற்பதில் திருப்தி நிலை இன்மை.
6) தனியறை இல்லை.
7) இணைய வசதிகள் இன்மை.
8) தொழில்நுட்பம் ரீதியான அறிவின்மை
9) சிறு நூலக வசதியின்மை

உரு 03 ஆனது கற்றல் வசதிகள் தொடர்பாக விபரிக்கின்றது. தனியறை இல்லை என்று கூறுபவர்கள் 57% ஆகவும் மடிக்கணினி வசதிகள் இல்லாதவர்கள் 63% ஆகவும்

தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி, கைப்பேசி இல்லை என்பவர்களின் வரிசையாக 76%, 80%, 12% ஆகவும் காணப்படுகின்றது. மேலும் இணைய வசதிகள் இல்லை என்று கூறுபவர்கள் 32% ஆனவர்களும் உறவினர்களின் ஒத்துழைப்பு இல்லாதவர்கள் 53% எனவும் அறிய முடிகின்றது. டயசியா புவிராஜ் பொழுதுபோக்கிற்காக பயன்படுத்தப்படும் தொலைக்காட்சியில் வாழ்க்கைத் தேவையான பொதிந்திருக்கும் விடயங்கள் உள்ளன. ஆனால் தொலைக்காட்சியுடன் அதிகளவு இணைந்திருப்பின் உடல்,உளபாபாதிப்பு பற்றி கூறியுள்ளார். எனவே இக்கூற்றானது பொழுதுபோக்கு சார் விடயங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.


ஆனால் தற்போதுள்ள சூழ்நிலையைப் பொறுத்து பல்கலைக்கழக மாணவர்களின் ஓய்வு நேரத்தை திறன்பட கற்றுக்கொள்வதற்கு இவ்வாறான வசதி வாய்ப்புக்கள் இன்றியமையாததாக உள்ளன. அவற்றிலும் குறிப்பாக இணையத்தள வசதிகளைக் குறிப்பிடலாம். இன்று இணையம் இல்லாத மாணவர்களின் எதிர்காலம் என்ன? என்பது கேள்விகுறியாகும்.

வாசிப்பு மற்றும் கல்வி நடவடிக்கைகளில் தமது ஓய்வு நேரங்களை இணையத்தளத்தினூடாக சரியாக பயன்படுத்த முடியாமைக்கான காரணங்களாக கீழ்வருவனவற்றை குறிபிட்டுள்ளனர்.


1) புத்தகங்களை நேரடியாக வாசிப்பதற்கான ஆர்வமானது ஒளிப்படைத் திரையினூடாக (Pdf வடிவில்) வாசிப்பதில் இல்லை
2) நேரடியாக புத்தகத்தை வாசித்தவுடன் இலகுவாக விடயங்கள் புரிந்து மனதில் பதிந்து விடும். ஆனால் ஒளிப்படைத் திரையில் வாசிப்பு எனும் போது அவ்வாறானதொரு திருப்தி கிடைப்பதில்லை.
3) நீண்ட நேரம் ஒளிப்படைத் திரையினூடாக கற்க முடியாதுள்ளது.
4) உணர்ந்து கற்றுக்கொள்வதில் கடினம்.
5) நேரடிக் கற்றலின் போது பூரண ஈடுபாடு, தெளிவு கிடைத்தது. தொழில்நுட்பத்தினூடாகக் கற்பதில் பூரண ஈடுபாடோ தெளிவோ கிடையாது.
6) சிந்தனைச் சிதறல் ஏற்படல்.
7) சோர்வு, களைப்பு ஏற்படல்.
8) உடல் ரீதியான பாதிப்புக்கள் ஏற்படல். (கண் பார்வை குறைபாடு, முதுகு/ இடுப்பு வலி மற்றும் தலைவலி ஏற்படல்)

A. Rameez et al, (2020) கொவிட் 19 இன் தாக்கம் மாணவர்களின் உளநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே கல்வியை நிலை நிறுத்துவதில் சவால்கள் உள்ளன என்கின்றனர். எனவே இக்கூற்றானது Covid - 19 குப் பின்னர் பல்கலைக்கழக மாணவர்களின் கல்விசார் விடயங்களில் உளத்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.


ISBN 978-624-5736-14-0




தொடர்ந்து பார்க்கும் போது, வாசிப்புக் கலாச்சாரமானது பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. அந்தவகையில் Covid-19 க்கு முன்னர் வாசிப்பின் மட்டத்தை கணிப்பிடுகையில் ஒரு நாளில் 20 - 30 நிமிடங்கள் வரை 33% ஆனவர்கள் ஈடுபட்டுள்ளனர். Covid-19 குப் பின்னர் வீட்டில் 53% ஆனவர்கள் ஈடுபட்டுள்ளனர். எனவே இந்த நடவடிக்கைகளில் ஈடுபாடு அதிகரித்துள்ளன. 1 - 3 மணித்தியாலங்களில் 48% ஆனவர்கள் ஈடுபட்டுள்ளதுடன் Covid-19 குப் பின்னர் 40% ஆனவர்கள் ஈடுபட்டுள்ளனர். ஆகவே இங்கு இச்செயற்பாடுகள் குறைந்துள்ளன. 3 மணித்தியாலங்களுக்கு மேலதிகமாக வாசிப்பில் ஈடுபடுபவர்கள் 19% ஆனவர்களாகவும் Covid-19 குப் பின்னர் 9% ஆனவர்கள் ஈடுபட்டுள்ளனர். எனவே இச்செயற்பாடு குறைந்து காணப்படுகின்றன.இதிலிருந்து நோக்குகையில், 20 - 30 நிமிடங்கள் வரை Covid – 19 சூழ்நிலையில் வீட்டிலிருந்து வாசிப்பில் ஈடுபட்டமை 53% னால் முன்னேற்றம் அடைந்துள்ளதாகவும் ஏனைய இரு விடயங்களில் வீழ்ச்சி நிலையை அடைந்துள்ளதாகவும் இவ்வாய்வினூடாக இனங்காணப்பட்டுள்ளது.



மற்றும் உரு 05 ஆனது தற்போதைய நிலையில் அதிகமானவர்களின் வீட்டில் நூலக வசதிகள் இல்லாமையினால் ஒளிப்படைத் திறையின் மூலமாக புத்தகங்களை (Pdf வடிவில்) வாசிக்கும் போது திருப்தி நிலை இல்லாமல் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

மேலும் ஒளிப்படைத்திரையின் மூலம் (Screen) புத்தகங்களை வாசிக்கும் போது உரிய பயனை அடைவதில் திருப்தி இல்லை என்பவர்கள் 62% ஆனவர்களும் 38% ஆனவர்கள் திருப்தி அளிக்கின்றது என்றும் கூறியுள்ளனர். A.C.M Nafrees (2020) இலங்கையில் இளங்கலை பட்டதாரிகளில் பாரம்பரிய வகுப்பறைக்கற்றல் செயன்முறைக்கு பதிலாக நிகழ்நிலைக்கற்கைக்கு மாற்றமடைந்து உள்ளதால் பல நன்மைகளையும், தீமைகளையும் எதிர்கொள்வதால் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்கின்றார். எனவே இக்கூற்று இம்மாணவர்களின் கற்கும் முறை கற்றலில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

**முடிவுரை**

தற்போதைய Covid-19 ஆனது மாணவர்களின் கல்வி நிலையில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. அனைத்து மாணவர்களும் online னூடாகவே தமது கற்றலினை மேற்கொள்ளவேண்டிய கட்டாய நிலையில் உள்ளனர். பல்கலைக்கழக மாணவர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. இந்த பின்னணியில் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீட மாணவர்களை மையமாகக் கொண்டு Covid – 19 க்குப் பின்னர் இவர்களின் ஓய்வு நேரப்பயன்பாடு தொடர்பாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப் பீட மாணவர்களுள் அதிகமானோர் பல்கலைக்கழக வளாகத்தினில் இருந்த போது, குறைந்த வீதத்தில் ஓய்வு நேரம் காணப்பட்டாலும் அவர்கள் தமது பொழுது போக்கு நேரங்களை சிறப்பாக பயன்படுத்தியுள்ளனர். தற்போதைய நிலையில் ஓய்வு நேரம் அதிகமாக காணப்பட்டாலும் அதை குறைந்த வீதத்தில் கற்றலுக்காக பயன்படுத்துகின்றனர். பல்கலைக்கழகத்தின் சூழல், ஏனைய பொழுதுபோக்கு வசதி வாய்ப்புக்கள், உள திருப்தி முதலியவை தற்போதைய சூழலில் காணப்படாமையும் அனைத்து நடவடிக்கைகளும் இணையத்தளத்தினூடாக மேற்கொள்ள வேண்டியமை மற்றும் வீட்டுச் சூழலில் கற்றல் நடவடிக்கைகளை உரிய முறையில் பயன்படுத்துவதற்கான சரியான வழிகாட்டல்கள் இல்லாமை காணப்படுகின்றமையினாலும் அவர்களின் ஓய்வு நேரத்தினை முறையாக பயன்படுத்த முடியாதுள்ளது.

எனவே இத்தகைய சூழ்நிலைகளை மாற்றியமைத்து மாணவர்களை தமது பொழுதுபோக்கு நேரங்களில் கல்விசார் நடவடிக்கைகளை மேம்படுத்தும் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் ஈடுபடுத்துகின்ற வகையில் கற்றலுக்கான இலவச இணையத்தள வசதிகள், வழிகாட்டல்கள் மற்றும் நுட்பங்கள் போன்றவற்றை வடிவமைக்க வேண்டும்.

**ஆலோசனை**

Covid – 19 தொற்றுநோய் காரணமாக வீடுகளில் உள்ள போது மாணவர்கள் பொருத்தமான பொழுதுபோக்குகளைத் தெரிவு செய்து வினைத்திறனுடன் செயலாற்றுவதற்கு தமது நேரங்களை முகாமை செய்வதற்கான திட்டமிடல்களை மேற்கொள்ள முடியும்.

**உசாத்துணைகள்**


Mahajan, M. V., & Kalpana, R. (2018). A study of students' perception about e-learning. Indian Journal of Clinical Anatomy and Physiology, 5(4), 501–507.

Mather, M., & Sarkans, A. (2018). Student Perceptions of Online and Face-to-Face Learning. International Journal of Curriculum and Instruction, 10(2), 61–76.

Nafrees, A. C. M., & Roshan, A. M. F. (2018). Internet Usage among the Undergraduate Students in Eastern Province, Sri Lanka. 1st Annual International Research Symposium (AIRS' 18), ICBT Campus, Sri Lanka, 143–151.

Zhu, Y., Zhang, J. H., Au, W., & Yates, G. (2020). University students' online learning attitudes and continuous intention to undertake online courses: a self-regulated learning perspective. Educational Technology Research and Development, 68(3), 1485–1519.

Gopinath, M.K., (2004). "English Proverbs & Equivalent Kannada Proverbs", Published by (P.p -172- 173).

Trung, T., Hoang, A. D., Nguyen, T. T., Dinh, V. H., Nguyen, Y. C., & Pham, H. H. (2020). Dataset of Vietnamese student's learning habits during COVID-19. Data in Brief, 30(2020).

Rameez, A., Fowsar, M.A.M., & Lumna, N. (2020). Impact of Covid-19 on Higher Education Sectors in Sri Lanka: A Study based on South Eastern University of Sri Lanka. Journal of Educational and Social Research, 10 (6), 341-349. http://www.richtmann.org/

Lishanthi Wijewardene (2021). The Impact of Covid-19 on Higher Education In Sri Lanka. IOSR Journal of Humanities And Social Science (IOSR-JHSS), 26(5), 54-59. www.iosrjournals.org

Ekanayake, E. M. H. L., & Weerasinghe, T. D. (2020). Sustainable Engagement of University Students in E- Learning during the Post-pandemic of Covid-19: Evidence from Faculty of Commerce and Management Studies, University of Kelaniya, Sri

Lanka. Kelaniya Journal of Human Resource Management. 15(2),47-73.http://doi.org/10.4038/kjhrm.v15i2.78

Hizbullah, M.J.M. (2020, April 30). விளையாட்டு பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம். Alimamslsf.http://www.alimamslsf.com/2020/04/02-mjm-hizbullah-anvari.html?m=1

சத்யாஇநி. (2018, june 23). பொழுது போக்கைத் தொலைத்த இன்றைய பரிதாப சிறுவர் சமூகம். தினகரன். https://www.thinakaran.lk/2018/06/23/

சிவத்திரன் (Presenter). (2020, may 21). கொரோனா காலத்தில் மாணவர்களது கல்வி எதிர்நோக்கும் பிரச்சினைகள் [Video]. IBC Tamil TV. YouTube. https://youtu.be/2NJF6YIkhmo

ஸாஹுல் ஹமீது, எம். (2009, January 1). வீணாகும் நேரம். இஸ்லாம் கல்வி. https://www.islamkalvi.com/?p=103255

மிப்றாஹ், எம். (2020). உங்கள் வாசிப்பு பழக்கத்தை எவ்வாறு வளர்ப்பது. https://ta.10steps.org.

அபுல் ஹஸன்., (2018). أنواع الهوايات . https://mawdoo3.com.